செ.வெ.எண்: 10 நாள்: 06.08.2020

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்ட முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் சார்ந்தோர்கள் அறிவது, தங்களது சிறார்கள் பல்வேறு கல்விகளில் சேர்வதற்கு சார்ந்தோர் சான்று ஆன்லைன் (Online) http://esmwel.tn.gov.in மூலம் விண்ணப்பித்து பெற்றிட வழிமுறைகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டள்ள வழிமுறைகளைப் பின்பற்றி சார்ந்தோர் சான்று பெற்றிட அறிவுறுத்தப்படுகிறது. மேலும் அலுவலக வேலைநாட்களில் அலுவலகத்திற்கு வர இயலும் பட்சத்தில் கீழ்க்காணும் ஆவணங்களுடன் விண்ணப்பித்து சார்ந்தோர் சான்று பெற்றிடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கல்லூரி சேர்க்கைக்கான விண்ணப்ப படிவத்தின் எண், முன்னாள் படைவீரர் படைவிலகல் சான்று மற்றும் நகல், அடையாள அட்டை, 10-ம் வகுப்பு / +2 மதிப்பெண் பட்டியல் நகல் பள்ளி தலைமை ஆசிரியரிடம் மேலொப்பமிடப்பட்டது, மகன் /மகள் பெயர் தனியே Part-II order publication செய்யப்பட்டிருந்தால் அதன் நகல், படைவிலகல் சான்றில் மகன் /மகள் பெயர் குறிப்பிடப்படாதவர்களும், பின்னர் Part-II Order செய்யதாவதர்களும் ரேஷன் கார்டு நகல் அல்லது மகன் / மகளின் ஆதார் அட்டை நகல் சமர்ப்பிக்கவும்.

கணிணியில் தங்களது பெயர் பதிவினை பதிவேற்றம் செய்யாதவர்கள் பாஸ்போர்ட்சைஸ் போட்டோ –JPEG – 1MB-க்குள், படைப்பணிச்சான்று (Discharge Certificate) – PDF-ல் 2-MB-க்குள், ஓய்வூதிய ஆணை (PPO) ) – PDF-ல் 2-MB-க்குள்
ஆவணங்களை CD-ல் பதிவு செய்து வரவும்.

மேற்படி பல்வேறு கல்வி நிலையங்களில் சேரும் முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு விதிகளின்படி கல்வி உதவித் தொகை வழங்கிட பரிசீலிக்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தை நேரிலோ அல்லது 04329-221011 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு அறியலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**